

தலைமைச் செயலகத்தில் அமைச்சர் சி.வி.கணேசனை நேபாளம் மற்றும் இலங்கை கட்டுமான தொழிற் சங்கங்கள் மற்றும் வேலையளிப்பவர் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்து தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டுவரும் பல்வேறு நல வாரியங்கள் குறித்தும், தங்களின் நாடுகளில் அவற்றை செயல்படுத்துவது குறித்தும் நேற்று (10.12.2025) கலந்துரையாடினர். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் பொன்குமார், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர் கொ.வீரராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன் மற்றும் தொழிலாளர் நலத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தொடர்ச்சியாக பலவீனமடைந்து வரும்

# ரூபாயின் மதிப்பை உயர்த்த ஏதேனும் திட்டம் உண்டா?

## மக்களவையில் அருண் நேரு கேள்வி!



புதுடெல்லி, டிச. 11-

“தொடர்ச்சியாக பலவீனமடைந்து வரும் ரூபாயின் மதிப்பை உயர்த்த ஏதேனும் திட்டம் உண்டா?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:-

கடந்த ஆண்டில் டாலர் கணிசமாக வலுப்பெற்றுள்ளது, அதற்கடுத்து ரூபாயும் தொடர்ச்சியாக பலவீனமடைந்துள்ளது. ரூபாயின் பலவீனத்தை நிர்வகிப்பதற்கும், அதனால் ஏற்படும் பணத்தின் அதிக வெளிச்செல்லலை (OUTGO) நிர்வகிப்பதற்கும், ஏதேனும் திட்டங்கள் உள்ளதா என்று அரசாங்கத்திடம் கேட்டு அறிய விரும்புகிறேன். எனவே, எனது கேள்வி, அந்த சூழ்நிலையை நிர்வகிக்க அரசாங்கத்திடம் இருந்து ஏதேனும் தற்செயல் திட்டங்கள் (CONTINGENCY PLANS) உள்ளதா என்று கேட்பதாகும். என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பங்கஜ் சௌத்ரி (நிதித்துறை இணை அமைச்சர்): பதில் அளிக்கும் போது:- டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சந்தை அடிப்படையிலானது என்பதை உங்கள் மூலம் உறுப்பினருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் எந்த வரம்பும் நிர்ணயிக்கப்படவில்லை. மேலும், அரசாங்கம் இதில் எந்தவித தலையீட்டையும் செய்வதில்லை. சிறப்பு சூழ்நிலைகளில், ரிசர்வ் வங்கியால் (RBI) டாலரின் விநியோகம் கண்காணிக்கப்படுகிறது என்று கூறினார்.

### பகுதிக் கழகச் செயலாளர் நீலாங்கரை வி.ஏ.மதியழகன் எம்.சி. பங்கேற்பு!

# சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி இளைஞரணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி அமைப்பாளர் இரா.நாகேந்திரன் தலைமை! கா.வி.தியாகராஜன் முன்னிலை!

சென்னை, டிச. 11 -

கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வருகின்ற (14.12.2025 - ஞாயிற்றுக்கிழமை) அன்று திருவண்ணாமலை கலைஞர் திடலில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்றும் வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி இளைஞரணி அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (11.12.2025 - வியாழக்கிழமை) மாலை 3 மணிக்கு, இ.சி.ஆர். சாலையில் உள்ள சுகன்யா திருமண மண்டபத்தில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் இரா.நாகேந்திரன் தலைமையிலும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வி.தியாகராஜன் முன்னிலையில் நடைபெறுகிறது.

சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நீலாங்கரை வி.ஏ. மதியழகன் எம்.சி, கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்ட துணைச் செயலாளர் மு.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே.ஏழுமலை, எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.ஜானகிராமன், மா.மகேஸ்வரன், விஜயகுமார், வி.எஸ்.சுதா, எம்.பாஸ்கர், வட்டக் கழக செயலாளர்கள் கே.குமார், கே.வி.சாந்தப்பன், பி.எஸ்.ஆறுமுகம், ஏ.கே.ஆனந்த், கி.சத்தியவேலன், எஸ்.கர்ணா, க.ஏகாம்பரம், சீனிவாசன், பி.என். ஜோதி மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே கூட்டத்திற்கு பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்டத் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு பகுதி அமைப்பாளர் இரா.நாகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தமிழ்நாட்டில் காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு

# உரிய முறையில் மேம்படுத்தப்பட்ட சிகிச்சை வழங்கப்படுகிறதா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, டிச. 11-

தமிழ்நாட்டில் காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு உரிய முறையில் மேம்படுத்தப்பட்ட சிகிச்சை வழங்கப்படுகிறதா? என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி! எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில், நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில், தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம் (ESIC) திட்டத்தின் கீழ் உள்ள மொத்த ஊழியர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கையின் விவரங்கள்;

(ஆ) தமிழ்நாட்டில், குறிப்பாக ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில், கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டு, ஆண்டு மற்றும் மாவட்ட வாரியாக, ESIC திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கையின் விவரங்கள்;

(இ) காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் தேவையைப் பூர்த்தி செய்ய, மேற்கூறிய மாவட்டங்களில் தற்போதுள்ள ESIC மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் சுகாதார வசதிகள் போதுமானதாக உள்ளதா என்பதை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா

(ஈ) அப்படியானால், அதன் விவரங்கள்;

(இ) தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக, ESIC நிறுவனங்களில் மருத்துவ உள்கட்டமைப்பு, நோயறிதல் வசதிகள் அல்லது மனிதவளம் கிடைப்பதில் ஏதேனும் இடைவெளிகளை அரசாங்கம் கண்டறிந்துள்ளதா; மற்றும்

(F) தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக காப்பீடு செய்யப்பட்ட நபர்களுக்கு ESIC சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும், சேவை வழங்கலை மேம்படுத்தவும், தரமான மருத்துவ சேவையை அணுகுவதை மேம்படுத்தவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பி இருந்தார். அதற்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் (சுஷ்ரி ஷோபா கரண்ட்லஜே) - அளித்த பதில் வருமாறு:-

(அ) & (ஆ): 2022-23 முதல் 2024-25 வரை நாட்டிலும் தமிழ்நாட்டிலும் தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம் (ESIC) திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு:

நாட்டில் பயனாளிகளின் எண்ணிக்கை கடந்த 3 ஆண்டுகளில் முறையே 13,30,73,951 - 14,43,59,629 - 14,91,31,214ஆகும்.

தமிழ்நாட்டில் பயனாளிகளின் எண்ணிக்கை முறையே
1,56,03,032
1,69,83,109
1,73,73,864 ஆகும்.

2022, 2023, 2024 மற்றும் 2025 காலண்டர் ஆண்டில் (30.11.2025 வரை) ராமநாதபுரம் உட்பட, தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக ESIC திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் (IPகள்) மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

ESICயின் முன்னரே வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின்படி சாத்தியக் கூறுகளை மதிப்பிடுவதன் மூலம் ESI கார்ப்பரேஷன் மருத்துவமனையை அமைப்பது தொடர்ச்சியான செயல்முறையாகும். விதிமுறைகளின்படி, 150 மற்றும் 200 படுக்கைகள் கொண்ட புதிய ESI மருத்துவமனையை அமைப்பதற்கு முறையே குறைந்தபட்சம் 1,00,000 மற்றும் 1,50,000 காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் (IPகள்) தேவை. மேலும், 50 கி.மீ சுற்றளவில் வேறு எந்த ESI மருத்துவமனையும் இருக்கக்கூடாது. ராமநாதபுரம் மாவட்டத்தில் IPகளின் எண்ணிக்கை 7913 மட்டுமே. எனவே, அந்த இடம் மருத்துவமனையை அமைப்பதற்கு தகுதியற்றது.

தமிழ்நாட்டில் மொத்த ஐபிக்களின் எண்ணிக்கை 44,77,800. தற்போது, 11 மருத்துவமனைகள் மற்றும் 241 மருந்தகங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன, மேலும் ஐபிக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குகின்றன. மேலும், மாற்றியமைக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ பயிற்சியாளர் (எம்ஐஎம்பி) திட்டத்தின் கீழ் 4 காப்பீட்டு மருத்துவ பயிற்சியாளர்களும் மாநிலத்தில் உள்ளனர். மேலும், 7 கூடுதல் மருத்துவமனைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன என்றார்.



சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன், பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், அட்கோகமலநாதன் ஆகியோர் முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திருவண்ணாமலையில் நடைபெற உள்ள வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் இளைஞர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்பது குறித்து, சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஆலோசனைகளை வழங்கினார்.

### இதுவரை ரூ.6 கோடியே 37 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 37 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-12-2025** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.டில்லிபாபு(முத்தமிழறிஞர் கலைஞர் கார் ஓட்டுநர் சஞ்சீவி மகன்),சென்னை. | – 25,000/– |
| 2. | திருமதி சி.மாணிக்கம், மலையான் தெரு, தென்காசி, தென்காசி மாவட்டம். | – 25,000/– |
| 3. | சி.மணி, எம்.ஜி.ஆர். நகர், கலைஞர் நகர் பகுதி, சென்னை தெற்கு மாவட்டம். | – 25,000/– |
| 4. | ஆர். சங்கர், அழகாபுரி, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | – 25,000/– |
| 5. | திருமதி பாவை சுப்பிரமணியன், சுபேதார் தெரு, கள்ளக்குறிச்சி. | – 25,000/– |
| 6. | அ. சண்முகம், 3வது வார்டு, தொரப்பாடி பேரூர், கடலூர் மாவட்டம். | – 25,000/– |
| 7. | எல். ராஜேந்திரன், சாத்தனூர், பாலக்குடி அஞ்சல், தஞ்சை மாவட்டம். | – 25,000/– |
| 8. | என்.சிவசுப்பிரமணியன், மருதூர்தெற்குசேத்தி கிராமம், வேதாரண்யம், நாகை. | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### ஸ்கிராப்பேஜ் கொள்கையால் லாரி உரிமையாளர்கள் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கும்!

# வணிக வாகன இயந்திர மாற்றத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 11–

டெல்லியில் நாடாளுமன்ற மாநிலங்களவை கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு ஸ்கிராப்பேஜ் கொள்கையால் லாரி உரிமையாளர்கள் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிப்பதால் வணிக வாகன இயந்திர மாற்றத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து மாநிலங்களவையில் அவர் பேசியது வருமாறு:–

வணிக வாகன ஸ்கிராப்பேஜ் கொள்கை மற்றும் நமது முக்கியமான லாரி துறை மற்றும் தேசிய விநியோகச் சங்கிலியில் அதன் தாக்கம் குறித்து இந்த பூஜ்ஜிய நேரத்தில் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தை எழுப்ப அனுமதித்ததற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்கிராப்பேஜ் கொள்கை மூலம் மாசுபாட்டைக் குறைத்து சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தும் அரசின் குறிக்கோள் நிச்சயமாக சிறந்த பணியாகும். இருப்பினும், வணிக வாகனங்கள், குறிப்பாக 20 ஆண்டுகளுக்கும் மேலான லாரிகள், கட்டாயமாக ஸ்கிராப்பிங் செய்வது, இப்போது எண்ணற்ற லாரி உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை கடுமையாகப் பாதித்து வருகிறது.

இந்தியாவின் சரக்கு போக்குவரத்தின் முதுகெலும்பான இந்த லாரிகளில் பாடி திறன் கட்டமைப்பு கொண்டுள்ளன. மாசுபாட்டிற்கான முக்கிய காரணம் பொதுவாக பழைய இயந்திரம் தான். இந்த பழைய மாசுபடுத்தும் இயந்திரத்தை புதிய பாரத் நிலை (BS) இணக்கமான இயந்திரத்துடன் மாற்றுவது ஒரு நடைமுறை மற்றும் செலவு குறைந்த நடைமுறையாகும்.

இந்த ஒற்றை மாற்றம், தொழில்நுட்ப ரீதியாக வாகனத்தை புதுப்பிக்க ‘எஞ்சின் மட்டும் மாற்ற வேண்டியிருக்கும் போது, முழு டிரக் பாடியையும் ‘ஸ்கிராப்’ செய்ய ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்? இந்தக் கொள்கை சிறிய லாரி உரிமையாளர்களுக்கு பெரும் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்துகிறது, அவர்களால் புதிய வாகனத்தை பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு வாங்க முடியாது. இது குறைந்த ஏற்றுமதி திறன் காரணமாக தளவாடச் செலவுகளை அதிகரிக்கவும், இறுதியில் சாதாரண குடி மகனுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலையில் பணவீக்கத்தை ஏற்படுத்தவும் வழிவகுக்கும்.

எனவே, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் இந்தக் கொள்கையை மறு பரிசீலனை செய்து, 20 ஆண்டுகளுக்கும் மேலான ஒரு லாரி பழைய எஞ்சினை புதிய, சான்றளிக்கப்பட்ட மற்றும் BSVI இணக்கமான எஞ்சினுடன் மாற்றினால், வாகனம் வெற்றிகரமாக ஒரு கடினமான தானியங்கி தகுதி சோதனையில் (ATS) தேர்ச்சி பெற்றால், அதை இயக்க அனுமதிக்க வேண்டும் என்றும் வணிக வாகன இயந்திர மாற்றத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கிறேன்.

இந்த நடவடிக்கை இயந்திர மாற்றத்தைத் தொடர்ந்து கட்டாய தகுதி சோதனை என்பது நமது பொருளாதார முதுகெலும்பை முடக்காமல் சுற்றுச்சூழல் நிலைத் தன்மையை உறுதி செய்வதற்கான ஒரு நடைமுறையாகவும், மென்மையான வழியாகவும் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

பூஜ்ஜிய